எண் சி ,257,2001

புதுவை அரசு

காவல்துறை

தேதி. 18.02.2017

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

புதுவை காவல் துறை தலைமை அலுவலகத்திற்குச் சொந்தமான பழைய ஆங்கிலம் தமிழ் தினசரிகள் மற்றும் மாத மற்றும் வார இதழ்கள் விற்கும் பொருட்டு ஆண்டு அடிப்படையில் (இந்த ஆண்டிற்கு 01.01.2017 முதல் 31.12.2017 முடிய) ஒரு கிலோவிற்கு சம்மதித்த விலையை குறிப்பிட்ட முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன,

2 பின்வருமாறு ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே விலை விகிதம் எவ்வளவு என குறிப்பிடவேண்டும்,

| வ. எண் | ஏலம் விடப்படும் விவரம் | ஒரு கிலோவிற்கான விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | பைசா |
| அ | பழைய ஆங்கில செய்தித்தாள்கள் | | |
| ஆ | பழைய தமிழ் செய்தித்தாள்கள் | | |
| இ | பழைய ஆங்கில மாத, வார இதழ்கள் | | |
| ஈ | பழைய தமிழ் மாத,வார இதழ்கள் | | |

3 முத்திரையிடப்பட்ட உரையில் "பழைய செய்தித்தாள்கள் மற்றும் மாத வார இதழ்கள் விற்பதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆண்டு அடிப்படையில் (இந்த ஆண்டிற்கு 01.01.2017 முதல் 31.12.2017 முடிய)" என குறிப்பிட்டு காவல் துறை தலைமை அலுவலகம். புதுவை என்ற முகவரிக்கு 13.03.2017 அன்று நண்பகல் 14.00 மணிக்கு முன்பாக வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகளை பெறுவதற்காக காவல்துறை கண்காணிப்பாளர் (தலைமையகம்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடவேண்டும், அவ்வாறு அனுப்பப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13.03.2017 அன்று பிற்பகல் 17.00 மணிக்கு ஆஜராகியிருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் பிரித்துப்பார்க்கப்படும்,

4 ஒப்பந்தப்புள்ளி அனுப்புபவர்கள் உத்தரவாத தொகையாக (EMD) ரூபாய் 1000/- க்கு, காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்) என்ற பெயருக்கு குறுக்கிட்ட வரைவு காசோலையை வங்கியில் பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் (Tender) இணைத்து கவரில் வைத்து காவல் கண்காணிப்பாளர்(தலைமையகம்). காவல்துறை என்று முகவரியிட்டு டெண்டர் பெட்டியில் போடவேண்டும், டெண்டர் முடிந்தவுடன் வெற்றிபெறாதவர்கள் செலுத்திய உத்தரவாத தொகை திருப்பித்தரப்படும், வென்ற ஒப்பந்தகாரர்களுடைய உத்தரவாத தொகை அரசாங்க கணக்கில் முறைப்படி அவர்கள் பெயரில் காப்புத்தொகையாக வைக்கப்படும்,

5, வென்ற ஒப்பந்ததாரர்கள் முழுத்தொகையினையும் உடனடியாக செலுத்தி பொருட்களை அவரது சொந்த செலவில் இந்த அலுவலக உத்தரவு கிடைத்த நான்கு நாட்களுக்குள் அலுவலக கட்டிடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். அப்படி செய்ய தவறினால் அவர் செலுத்திய காப்புத்தொகை அரசாங்கத்தைச் சேரும். மேலும் அவர் மேற்கொண்டு பொருட்களை எடுத்துச்செல்லும் உரிமையை அந்த வருடத்தில் இழந்து விடுவார். நான்காவது நாள் அரசு விடுமுறையாக நேர்ந்தால் வென்ற ஒப்பந்தக்காரரின் விண்ணப்பப்படி (எழுத்து ஏலம்) மறு வேலைநாள் வரை அந்த தேதி நீட்டிக்கப்படும். விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் அளவு தரம் மற்றும் மதிப்பு சம்பந்தமாக எந்தவித உரிமை கோரலும் அனுமதிக்கப்பட மாட்டாது,

6. எந்த காரணமும் கூறாமல் அனைத்து அல்லது ஏதேனும் ஒரு ஒப்பந்தப்புள்ளியை மறுக்க கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிற்கான விதிகளை மீறி செயல்பட்டால் டேவணித்தொகையாக கட்டப்பட்ட அல்லது காப்புத்தொகாயக வைக்கப்பட்டுள்ள தொகைளை முடக்கி வைக்கப்படும்,

7. பொருட்களை அலுவலக நேரத்தில் மட்டுமே அப்புறப்படுத்த வேண்டும்,

8. விதிமுறைக்கேற்ப விற்பனை வரி வசூலிக்கப்படும்,

9. வென்ற ஒப்பந்ததாரர் பழைய தினசரிகள் மற்றும் மாத வார இதழ்களையும் நிறுப்பதற்கு மிண்ணனு இயந்திரம் மட்டும் எடுத்துவர தம் சொந்த ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டும். அந்த முறை கீழ்க் கையொப்பமிட்டவரது திருப்திக்கேற்ப இருக்கவேண்டும்,

10. வென்ற ஒப்பந்ததாரர்கள் கட்டிய காப்புத்தொகையை ஒப்பந்தக்காலம் முடிந்தவுடன் திருப்பித்தர ஆவண செய்யப்படும்,

11. இது சம்பந்தமாக ஏதேனும் முரண்பாடு தோன்றினால் காவல் கண்காணிப்பாளர் (தலைமை அலுவலகம்) முடிவே உறுதியானது மற்றும் சட்டத்திற்கு உட்பட்டது,

காவல் கண்காணிப்பாளர்
தலைமை அலுவலகம்
புதுவை

பெறுநர்
இயக்குனர்
அரசு அச்சகம்
புதுச்சேரி
} அடுத்து வெளியிடப்படும் கெசட்டில் பிரசுரம் செய்யவும் மற்றும் 10 நகல்கள் தரக்கோரி

நகல் பிரதி-:

1. அனைத்து அரசுத்துறை அலுவலக தலைமை அதிகாரிகள் புதுச்சேரி அரசு } சம்பந்தப்பட்ட அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் பார்வைக்காக வைக்கவேண்டி

2. வலைதள அதிகாரி அவர்கள். காவல்துறை, புதுச்சேரி